# ஒரு வாக்களிக்கும் இடத்துக்குச் செல்ல இயலாதா?



## 2023 பொதுத் தேர்தலில் வாக்களித்தல்

நீங்கள் 2023 பொது தேர்தலில் ஒற்றோபர் 2 திங்கட்கிழமை முதல் ஒற்றோபர் 14 சனிக் கிழமை தேர்தல் நாளில் மாலை 7 மணி வரை வாக்களிக்கலாம். நீங்கள் செல்ல முன்னர் வாக்களிக்கும் இடங்கள் திறந்திருக்கும் நேரங்களையும் இடங்களையும் **vote.nz** இற் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்களால் வாக்களிக்கும் இடத்திற்கு செல்ல முடியாவிட்டாலும் நீங்கள் வாக்களிக்கலாம்.

**மேலும் தகவல்கள் இங்கிருந்து கிடைக்கின்றன:**

- **vote.nz** இற்குச் செல்லுங்கள்
- **0800 36 76 56** ஐ அழையுங்கள்

## Complete this form to authorise someone to collect voting papers on your behalf

**Voter's details. Please print clearly.**

My first name(s) are:

My last name is:

My contact telephone number is:

OFFICIAL USE ONLY:
Index reference

Address where I am enrolled to vote:

✓ Tick the electoral roll you believe you are enrolled on:

☐ General roll ☐ Māori roll

வாக்களிக்கும் இடத்தையும் நேரத்தையும் பற்றிய தகவல்கள் **vote.nz** இல் அல்லது **0800 36 76 56** ஐ அழைத்துப் பெறப்படலாம். அது பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு அஞ்சலில் அனுப்பப்படும் EasyVote பொதிகளிலும் அடக்கப்பட்டிருக்கும்.

நீங்கள் ஒற்றோபர் 2 திங்கட்கிழமை முதல் ஒற்றோபர் 14 சனிக் கிழமை தேர்தல் நாளன்று மாலை 7 மணி வரை வாக்களிக்கும் இடங்களில் வாக்களிக்கலாம். நீங்கள் செல்ல முன்னர் வாக்களிக்கும் இடங்கள் திறந்திருக்கும் நேரங்களையும் இடங்களையும் **vote.nz** இற் பார்த்துக் கொள்ளுங்கள். வாக்களிக்கும் இடங்கள் ஒற்றோபர் 14, சனிக் கிழமை தேர்தல் நாளன்று காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்.

## தேர்தல் நாளன்று வேலைக்குச் செல்வதா?

தேர்தல் நாளன்று வாக்களிக்கும் இடத்துக்குச் சென்று வாக்களிக்க வேலையிலிருந்து விடுமுறை பெற உங்களுக்குச் சட்டப்படி அனுமதியுண்டு. நீங்கள் எந்தவொரு வாக்களிக்கும் இடத்திலும் ஒற்றோபர் 2 திங்கட்கிழமை முதல் முற்கூட்டியே வாக்களிக்கவும் செய்யலாம்.

## நீங்கள் ஒரு பராமரிப்பு இல்லத்தில் இருந்தாலும் நீங்கள் வாக்களிக்கலாம்

நீங்கள் ஒரு பராமரிப்பு இல்லத்தில் இருந்தால் நீங்கள் எம்மைத் தொடர்புக் கொள்ள வேண்டியதில்லை. வாக்களிப்பு சேவைகளை ஏற்பாடு செய்ய உங்களது உள்ளூர்த் தேர்தல் தொகுதி முகாமையாளர் உங்கள் பராமரிப்பு இல்லத்தின் முகாமையாளரைத் தொடர்பு கொள்வார்.

## நீங்கள் மருத்துவமனையில் இருந்தாலும் வாக்களிக்கலாம்

நீங்கள் மருத்துவமனையில் உள்ளதால் உங்களால் வாக்களிக்கும் இடத்துக்குச் செல்ல முடியாவிட்டால் ஒற்றோபர் 2 திங்கட்கிழமை முதல் உங்களது நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் உங்களது வாக்களிப்புத் தாள்களை உங்களுக்குக் கொண்டு வரலாம். நீங்கள் தேர்தல் நாளுக்கு முன்னர் மருத்துவமனைக்கு செல்லத் திட்டமிடப்பட்டிருந்தால் உங்களால் முடியுமாயின் ஒற்றோபர் 2 திங்கட்கிழமை முதல் நீங்கள் முற்கூட்டியே வாக்களிப்பது சிறந்தது. மேலும் தகவல்களுக்காக **0800 36 76 56** இல் எம்மை அழையுங்கள்.

## உங்களால் வாக்களிக்கும் இடத்துக்குச் செல்ல இயலாவிட்டால் உங்களது தெரிவுகளாவன

நாம் வாக்களிப்பு இடத்துக்குச் செல்ல முடியாதவர்களுக்கு வாக்களிப்புச் சேவைகளை வழங்குகிறோம். நீங்கள் நேரடியாகச் சென்று வாக்களிக்க இயலாவிட்டால், உதாரணமாக சுகக்குறைவின் காரணமாக அல்லது பயணிக்க முடியாததால் வாக்களிக்க இயலாவிட்டால், நீங்கள் எவரிடமாவது உங்கள் வாக்களிப்புத் தாள்களைக் கொண்டு வரக் கூறலாம் அல்லது வாக்களிப்புத் தாள்களை உங்களுக்கு அனுப்புமாறு விண்ணப்பிக்கலாம்.

## எவரிடமாவது உங்களது வாக்களிப்புத் தாள்களைப் பெற்று வரக் கூறுங்கள்

உங்களால் வாக்களிக்கும் இடத்துக்குச் செல்ல முடியாவிட்டால் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தை நிரப்பி ஒப்பமிட்டு அதை உங்களுக்காக ஒரு வாக்களிக்கும் இடத்துக்குக் கொண்டு செல்லக் கூறுங்கள். பின்னர் அவர்கள் உங்களுக்கு நிரப்புவதற்காக உங்களது வாக்களிப்புத் தாள்களைத் திரும்பக் கொண்டு வருவார்கள்.

உங்கள் சார்பாக உங்களது வாக்களிப்புத் தாள்களை சேகரிக்க உங்களுக்கு யாருமில்லை என்றால் நாம் உங்களுக்கு அவற்றை அனுப்பி வைப்போம். **0800 36 76 56** இல் எம்மை அழையுங்கள்.

## உங்கள் வாக்களிப்பு ஆவணங்களைத் திருப்பி அனுப்பும் முறை

நீங்கள்:

எவரிடமாவது உங்களது நிரப்பப்பட்ட வாக்களிப்புத் தாள்களை ஒற்றோபர் 14 சனிக்கிழமை மாலை 7 மணிக்குள் வாக்களிக்கும் இடத்துக்குத் திருப்பிக் கொடுக்கக் கூறுங்கள்.

உங்களிடம் ஒரு திருப்பி அனுப்பும் தூதஞ்சற் பொதி இருந்தால் ஒரு தூதஞ்சற் பெறுகையை ஏற்பாடு செய்ய அப்பொதியிலுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள் அல்லது உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் **0800 36 76 56** ஐ அழையுங்கள்.

## Give my voting papers to the person I have authorised

The name of the person I have authorised to collect and deliver my voting papers to me is:

☐ I have been authorised to collect and deliver voting papers to the voter named on this form.

| Signature of authorised person | Date |
|---|---|
| | |

| Signature of voter | Date |
|---|---|
| | |

Note: this application must be signed for it to be valid